தோறும் எப்படிப் புகுந்து ஜனன மரண முண்டாகின்றன?" என்று மனங்கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

மனம்வாக்குக் காயத்தான் மருவுஞ் செய்கை
மலர்மணம்போ லுறுசன்ம மயக்கத் தாலே
இனமாக்கும் பிறவியினி விழுத்துக்கொண்டே
எத்தனையோ சன்மத்தி லிறக்கச் செய்யும்
தனவாக்காய்ப் பிரமாவுஞ் சிருட்டி செய்யத்
தான்றானே வளர்ந்திந்தத் தரணி மீதே
இனமாக்கு வெம்பாசந் தன்னிற் சிக்கி
இறந்தார்கள் பிறந்தார்க ளின்னம் நெஞ்சே!

மனம் கேட்டல்

"ஆனால், பிறந்தாலும் இறந்தாலும், வேதாகம சாத்திரச் சொற்படி நடந்தால், தேவேந்திர பதவி பிரமபட்ட முதலானவை அடையலாமென்று சொல்லுகிறார்களே? அது சுகமல்லவா?" என்று மனங்கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

முந்த சன்மமாம் புண்ணிய மிகுந்திடின்; முக்கிய முண்டாகும்;
பிந்த சன்மமாம் பாவமே மிகுந்திடிற் பெரியதோர் துயராகும்;
அந்த இரண்டையு மறுத்திடி லொளிதரும் அரன்கழற்
றுணையாகும்;
பந்த மானதோர் புராணமும் வேதமும் படைத்தது யறிவாயே

மனம் கேட்டல்

"ஆனால், மும்மூர்த்திகள் பட்டமாயிருந்தாலும், தேவேந்திரப் புகழ்ச்சி பெற்றாலும், பின்னும் பூலோகத்திலே பிறப்பதுண்டோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

வாழும் மாலயன் உருத்திரன் இந்திரன்
வானவ ரானாலும்
சூழும் மாயுகம் பிரளயந் தன்னிலுஞ்
சுகமுடன் வாழ்ந்தாலும்
தாழு மானதொல் லுலகில்வந் துறுவர்கள்;
தரணியோர் புகழ்ந்தேத்த
வீழும் நெஞ்சமே! அரனடி சேர்ந்திடில்
வினைக்குழி யழுந்தாயே

மனம் கேட்டல்

"ஆனால், வேதாகம புராண சாஸ்திரங்களுண்டாக்கி வைத்தார். அவற்றாலே என்ன பிரயோஜனம்?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

நரசன் மந்தனை யெடுத்துமப் பவத்தினில் நழுவிடா
திவ்வணமே
திரம தாகவே யீசனுத் தரவினிற் செய்வர்புண் ணியமென்றே
வரமு டைத்தநல் வியாசருஞ் செய்தவர் வழங்கிடு மதனாலே
பரவ டியையுறு முத்தர்க ளிருவினைப் பற்றறப் பார்த்தாரே

மனம் கேட்டல்

"ஆனால், ஒருவர் செய்கிற பாவ புண்ணியம் ஒருவருக்கு உண்டென்கிறது எவ்விதம்?" என்று மனங்கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

ஒருவர்செய்த பாவபுண்ய மொருவ ருக்கிங்
குண்டென்று சொல்லுகின்ற வூமை நெஞ்சே!
தருகுமவ ரவருயிர்க்குத் துணையார்? சொல்வாய்:
தந்தைதாய் பெண்டுபிள்ளை துணையு மாமோ?
வருகுமந்த வியாதிகளும் வினைதா னல்லோ?
மக்கள்பெண்டு தந்தைதாய் வாங்கிக் கொண்டு
திருகுமவர் பின்னொருவர்க் கீந்த துண்டோ?
திருட்டாந்தங் கண்டுநீ தெளிந்தி டாயே

மனம் கேட்டல்

"அப்படியானால், புராணங்களிலே ஒருவர் செய்த பாவ புண்ணியம் மற்றொருவருக்கு உண்டென்று பொய் சொல்ல வேண்டியதென்ன?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

பாசபந்த மானதொரு மூடர்க் கிந்தப்
பற்றுதல்வை யாவிட்டால் நம்ப மாட்டார்;
ஆசைக்கொண்டு செய்யார்கள் விகாதஞ் செய்வார்
அதனாலே பொருத்தம்வைத்துச் சொன்ன தல்லால்,
நேசமிது போலவே பகைத்தார் பாருள்
நீங்கினால் வேறுகதி நிலத்தோர்க் குண்டோ?
மோசமிது நம்பாதே நெஞ்சே! கேளாய்:
முனைந்தவர்க்குச் செய்தபலன் முடியுந் தானே

மனம் கேட்டல்

"ஆனால், ஒருவருக்கொருவர் நன்மை தீமைக் கூட்டுறவில்லையே? அப்படியிருக்க, ஒரு குடும்பத்திலேயுள்ள பந்து ஜனங்கள் ஒருவருக்கொருவர் பிறவற்றிற்கு இடங்கொடாமல் உள்ளுக்குள்ளே அனேக விகற்பத்தோடு மனம் பேதித்து வாழ்கிறார்களே! எந்தப் பற்றுதலைக் கொண்டு ஒன்றுபோல இருக்கிறார்கள்?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

பெண்ணாலும் பொன்னாலும் பூமி யாலும்
பெருக்கவே யிச்சைகொண் டொன்றுக் கொன்று
திண்ணர்க ளுறவாடிச் செத்தா ரல்லாற்
சேர்ந்துமன மொன்றாகிச் சிறந்திட் டாரோ?
கண்ணாலே பார்த்துநீ சுகங்கண் டாயோ?
கவலைக்கே யாளாகிக் கருத்தி ழந்து
புண்ணாகிப் பிறப்பிறப்பிற் புகுந்திட் டாய்நீ
பூமலர்த்தாள் துணையென்று புகழ்வாய் நெஞ்சே!

மனம் கேட்டல்

"ஆனால், வினைவழியே உயிர் இத்தேகத்தை விட்டு இனிமேல் தேகமெடுக்கிறது எந்தத் தேகமோ, அதைத் தெரியும்படி இத்தேகத்தை விடும்போது யாதொரு குறியுண்டோ?" என்று மனங் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

தேகந் தனிற்பொறியுஞ் சீராம் புலன்கரணம்
ஆகந் துறக்குமப்போ தந்நேரம் - போகந்தான்
எவ்விடத்துச் சென்றதோ ஏற்குங் கடவடிவம்
அவ்விடத்தை நன்றா யறி.

மனம் கேட்டல்

"ஆனால், வினைப் பயனுமறிந்தேன்; இந்த அருமையாகிய மானிட தேகம் வந்ததும் அறிந்தேன்; வேதாகம புராண சாத்திரங்களது கட்டுப்பாடு மறிந்தேன்; பிறப்பிறப்பென்கிற விவரமுமறிந்தேன்; வினை வழியே தேகமெடுக்கிறதென்னும் விவரத்தையும், என்னால் வினையுண்டாகிற தென்பதையும் அறிந்தேன்; ஒருவருக்கொருவர் நன்மை, தீமை, உதவியில்லை யென்பது மறிந்தேன். ஒரு குடும்பத்திலே பல மக்கள் ஒருங்குகூடி வாழ்கிற பந்தத்தையும் அறிந்தேன்; எல்லாமுள்ளபடி ஒத்துக் கொண்டேன். அரனது திருவடி நிழலை அடைகிறதே சுகமென்று ஆசை கொண்டேன். இத்தனை நாளாக என்னை நம்பியிருந்த குடும்பத்தாரெல்லாரும் இளைஞர்களாய் இருக்கிறபடியினாலே, அவர்களை விட்டுவிட்டால் வேறு கதியின்றி அவர்கள் வருந்துவார்களாதலால், அவர்கள் பக்குவகால பரியந்தமிருந்து காக்கவேண்டுமென்று பரிதாபப் படுகின்றமையால், இதற்கொரு வயணஞ் சொல்லுக" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

அவரெல்லாம் இருக்கவிப்போ துன்னை யேமன்
அழைத்துவிடி லியாது செய்வாய் அழகு நெஞ்சே!
இவர்களுக்குப் பிழைக்கும்வகை திரும்பி வந்தே
ஏதுவாய் முடிப்பதுண்டோ? எண்ணிப் பாராய்;

தவறிநீ கடம்விட்டுப் போகும் போது
தாம்கூட மாண்டாரோ விழைப்பில் லாமல்?
அவரவர்க்குச் சிவன்றுணையென் றெண்ணி டாமல்
ஐயத்தால் இப்படியே அலைவுற் றாயே!

மனம் கேட்டல்

"ஆனால், அறியலானேன்; இனிமேற் பாச பந்தத்தில் வீழ்வேனோ? திருவடியை அடையாமலிருப்பேனோ? ஆனால் இன்னும் கொஞ்சகாலம் பொறுத்துத்தான் திருவடியை அடைவதற்கு ஏது பண்ணிக்கொள்ளக் கூடாதோ? இப்போதுதானே துணிந்து கொள்ள வேண்டுமோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

காயமன வாக்குதான் தளர்ந்த போது
கருத்தழிந்தே யுறுதியுற்றுப் பாசம் மீறி
நேயபந்த மாய்கையினிற் பற்றிக் கொண்டால்
நெற்றிக்கண் படைத்தவர்தாம் நிலைப்பிப் பாரோ?
மாயபந்த மானவிந்தக் காயந் தானும்
வல்லமையோ? எத்தனைநாள் வாழு மோசொல்:
காயமது நிலையல்ல வென்று முன்னோர்
கண்ணினொளி மழுங்குமுன்னே கதியுற் றாரே

மனம் கேட்டல்

"அப்படியானால், சாலவும் அச்சங்கொண்டேன்! இனித் திருவடி அடைவதற்குப் போந்த வழி சொல்" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

முந்துபரி பூரணமாய் முந்தி யடைந்தவர்கள்
சிந்தைமகிழ்ந் தோதுஞ் சிவநூலை - உந்தியுந்திப்
பார்த்தறிநீ நன்றாய்ப் பகுத்துப் பகுத்து நெஞ்சே!
சேர்த்தறிநீ யென்வசத்திற் செல்

மனம் கேட்டல்

"அப்படியே சொல்லுகிற சில நூல்களைப் பார்த்தேன். திருவள்ளுவநாயனார் முப்பால் வைத்துக் குறள் சொன்னதிலே,

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் சிறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை.

என்று சொற்றனர். அஃதென்ன சொல்?" என மனம் வினாவ, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

யாவர் இருக்கும் நிலையதனை அவர்க்கே அதனி னிலையமர
மூவர் முதலாம் நீடியோர்க்கும் முழுக்கத் துறந்தோர் காமியர்க்குந்
தேவ ரீர்க்குந் திறமுதலாய்ச் சிறக்கக் காட்டுங் கண்ணொளிபோல்
நாவி லிருந்தே அஞ்சனமாய் நவின்ற மொழியென் னாயகமே

மனம் கேட்டல்

"ஆனால், முத்தி நிலையை மாத்திரம் தனிமையிற் பேசுகின்ற நூல்தான் எவ்விதமாகச் சொல்லும்?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்

தேகம் எடுத்ததுவுஞ் சிந்தை யுடைத்ததுவும்
போகசமூ சாரத்திற் புக்கதுவும் - தாகமது
கொண்டு தவிர்த்துவுங் கூறுங் கனவெனவே
கண்டுசொல்லும் நூலதனைக் காண்

மனம் கேட்டல்

"ஆனால், அந்த நூலும் பார்த்தேன்; அதிலுள்ள பொருளைச் சங்கையற இப்படியிருக்குமென்று தெரிந்து கொண்டாற் போதுமோ?" என்று அதிவினயத்துடன் மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

அறிவுக்கே சாட்சிகொண்டு நூலைப் பேசி
அங்கத்தைத் தானழித்தே அகத்தை நோக்கிக்
குறிவைத்த படியிருந்து மெய்யைப் பொய்யாக்
குற்றமென்றே பொய்யைத்தான் பொய்யாய்க் கண்டு
நெறியுற்றே இருவினையும் நீக்கிப் போட்டு
நேசமுடன் ஈசனுடன் பாசம் வைத்துப்
பிறிவற்றே ஒன்றாகி வாழ லாகும்;
பேதித்துப் போகாதே பேணிக் கூடே.

மனம் கேட்டல்

"அந்தப்படிதானே அனுபவிக்கிறதா அல்லது மற்றொருவருடைய சகாயமும் வேண்டியிருக்குமா?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

புகர்ச்சமய மாகின்ற பலசமயந்
தன்னிலே புகுந்தி டாமல்
அகச்சமய மாகின்ற சிவசமயத்
திச்சைக்கே யகப்பட் டால்நீ
மிகப்பெரிதாம் புத்தியைநீ படைத்திருந்தும்
பெரியோரை மேவி டாமல்
தகப்படவே பிறவியென்ற நோய்க்குள்ளே
சிக்கித்தான் தளர்வ தேனோ?

மனம் கேட்டல்

"ஆனால், பெரியவர்களைச் சாரவும் வேண்டுமோ?" என்று மனங் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

பெரியோரைச் சாராமல்அவர்களுக்கே
அன்புசெய்து பேசி டாமல்
துரியமா மதீதத்தில் சிவபூசை
செய்யாமல் சுற்றிச் சுற்றி
அரியயனுங் காணாத பரமசிவ
மென்றதையு மறிந்தி டாமல்
சரியென்று வினைப்பயனுங் கொண்டதுவே
கோலமாயிச் சாதித் தாயே.

மனம் கேட்டல்

"ஆனால், தெளிந்த பெரியவர்களுக்கு ஜகத்திலே பிரயோஜனமில்லையே! அவர்கள் எவ்விடத்தில் இருப்பார்களோ? அவர்களைக் கண்டு தரிசிக்கலாமோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

தெளிந்த துறவி இகந்தனிலே தேகப் பிராரத் துவப்படிக்குப்
பொழிந்தே கரணத் தனுபோகப் புவனத் திருந்து மெச்செயலும்
ஒழிந்து சிந்தை தெளிவுற்றே ஒன்றே சிவமென் றிருப்பார்கள்
இழந்த பேரும் அவரைக்கொண் டேறு வார்கள் இகத்தோரே.

மனம் கேட்டல்

"ஆனால், இகத்தில் சஞ்சரிக்கிறதனால் பெரியவர்களுக்கு இடர் வாராதோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

கருவி யகன்றிவ் வுலகத்தைக் கனவென் றிருக்கக்
கருத்ததனுள்
உருவைக் கண்டொப் புவமையற்றே யுள்ளும் புறம்பு
மொன்றாகிக்
குருவைப் பணிந்து பூரணத்தில் குலாவு மடியார் சகந்தனிலே
மருவப் பொருந்தி வாழ்ந்தாலும் மாசற் றிருப்பார் வல்லவரே.

மனம் கேட்டல்

"ஆனால், விபரீதம் மிகுந்து வந்ததானால், அதை நீக்கிக் கொள்ள வல்லமையுண்டோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

முந்த இருந்த அஞ்ஞான மூட மான சத்தியையும்
பந்த மறவே துணிந்துபரா பரனைத் தினமுங் கைக்கொண்டு
சிந்தை தெளிந்தே குருபரனைச் சிவமென் றெண்ணுந்
துணிவதனால்
தொந்தம் அறுத்துச் சிவானந்தச் சோதி யதுவாயிச் சகிப்பாரே.

மனம் கேட்டல்

"அப்பேர்ப்பட்ட பெரியவர்கள் எந்தச் சாதியாயிருந்தாலும் தொண்டுபடலாகுமோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

சாதிப் பேதந் தனைக்குறித்துத் தயங்கி மயங்கித் தளராதே;
சாதி யாவ தெவரறிவர்? சருவ வுடலு மொன்றாச்சே;
சாதி யாவ ரெவரென்னில் தன்னை யறிந்து சிவமான
சாதி பெரிய சாதியென்று சாற்றும் மறைகள் சத்தியமே.

மனம் கேட்டல்

"ஆனால், பெரியவர்களைச் சாதி பிரித்துச் சொல்லுகிறதனாலே குற்றமுண்டோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

ஞானம் பதியா இழிகுலத்தோர் நாட்டிப் பிரித்தே சாதி
தன்னை
ஈன சாதி யாரென்றே இகழ்ந்தார் முத்தர் பத்தரையு;
ஆன பெரியோர் தங்களையும் அவரி லொன்றாய்க்
குறித்துக் கொண்
டீன முரைத்தே யருநரகி லிழிந்து போனா ரிகத்தோரே.

மனம் கேட்டல்

"இப்பேர்ப்பட்ட பெரியர்கள் ஜகத்தோர்இகழத்தக்கவராகத் திரிவானேன்? ஜகத்தோரிகழுவானேன்? இதனால் யாருக்குத் துன்பம், யாருக்கு இன்பம் ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

பெரியோரைப் பித்தரென வுலகத் தோர்கள்
பேயரென்ன இகழ்வதென்ன பிரித்துக் கேளாய்;
திரிவார்க ளிச்சைப்படி சகத்தோர் பார்த்துத்
தீவினையும் நல்வினையும்திரட்டிக் கொள்வார்;
சரிவாச்சென் றிருவினையு மொழித்துப் போட்டுச்
சச்சிதா னந்தமென்ற பதத்திற் சார்ந்து
துரியாதீ தப்பொருளைப் பெற்று மந்தச்
சுயஞ்சோதி யாகியே சுகமுற் றாரே.

மனம் கேட்டல்

"ஆனால், பெரியவர்கள் இருவினையும் ஜகத்தோருக்கு ஒப்பித்துச் சுகம் பெற்றார்களே! அவர்களை இகழ்ந்த உலகத்தாரென்ன லாபம் பெற்றார்கள்?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

பெரியோரை இகழ்ந்தவர்கள் பெற்ற லாபம்
பேசக்கேள் நெஞ்சமே! பெருமை யாகப்
பரியேறிப் போனவன்றான் தீயில் வீழ்ந்து
பதைத்துப்போய் அடிவயிற்றில் நெருப்பைக் கூட்டி

நரிவாயில் பொருள்பறிக்கு மின்பம் போல
நகைத்திகழ்ந்தே எரிவாயின் நரகம் புக்கு
விரிவான எழுநரகில் விழுந்தி ளைத்து
மெலிந்திடுவா ரென்று மறை வீசுந் தானே.

மனம் கேட்டல்

"ஆனால், பெரியவர்கள் மகத்துவம் இப்படியென்றும் அறியலானேன்; அப்படிப்பட்ட மகாத்துமாக்கள் தெரிசனங் கண்டுகொள்ளுகிறதற்கு மார்க்கமுண்டோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

குற்ற மேதுங் குறியாமல் குணமும் பலவாய் விரியாமல்
ஒத்துப் பொறிகள் புலனைந்தும் உறவாய் நீயு முகந்திதனைப்
பத்தும் பதன மாகத்தான் பட்சம் மிகவும் வைத்துரைத்தாற்
சித்த மதனைச் சிவமாக்குஞ் சீவா னந்த போதமிதே.

மனம் கேட்டல்

"ஆனால், எங்களிடத்திலும் சாத்திரத்தின் கேள்வி கேட்டுத் தெரியும்படி செய்து கொள்ளுகிறது தானோ, அவர்களாக்கினைக்கு உட்பட்டுத் தொண்டு பண்ண வேண்டுமோ ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

ஐயமின்றி யுடல்பொருளும் ஆவி மூன்றும்
ஆண்டவனே யுன்னவென் றளித்துப் பின்னும்
துய்யகுரு நாதனுக்கே அடிமை யாகிச்
சொன்னபடி கேட்பதற்கே தொண்ட னாகி
மெய்யனென்றே அவர்மனமுங் களிக்கும் மட்டும்
வேண்டினதோர் சோதனைக்கு மிதத்தி டாமல்
செய்யதிரு மலரடியிற் காத்தி ருந்தார்
செவியதனி லுபதேசம் செய்வார் தாமே.

மனம் கேட்டல்

"ஆனால், வெகு பிரயாசையாய் இருக்கும் போல இருக்கிறதே! சாத்திரக் கேள்வி மாத்திரங் கேட்டுக்கொண்டு புத்தியினாலே அனுபவித்து முத்தியைக் கூடாதோ? குரு சமூகத்தில் தொண்டுபட்டுத் தான் முத்தியடைய வேண்டுமோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்

இருவினையுஞ் சமமடைந்தே யெழுந்து வந்த
என்குருவாம் மாணிக்க ஈச னார்க்கும்
குருவடிவாய் அம்பலவ ருபதே சித்த
குறிப்பைத்தான் அறியாயோ குருட்டு நெஞ்சே!

மருவுமிந்த வுடலுக்கு ளுடலைக் காட்டி
வாக்குக்கு வாக்கருளி மனமு மொத்துத்
திருவடியில் அடையகுரு முகூர்த்தம் அல்லாற்
சிவானந்த போதமுந்தான் தெளிந்தி டாதே.

மனம் கேட்டல்

"அப்படியானால், ஞானாசாரியரிடத்தில் அனுக்கிரகம் பெற்றுக்கொண்டால் போதாதோ? சாத்திரமும் பார்க்க வேண்டுமோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

சேறுபோல் தளதளென அலைபூ மிக்குள்
திடமான கம்பத்தை நாட்டி னக்கால்
மாறுகொண்டு விழுந்திடுமென் றதனாற் சுற்றி
மணற்கல்லைக் கெட்டித்து முறைக்கு மாபோல்
கூறுகின்ற சாத்திரத்தின் காட்சி தந்து
குலைந்திடாத் திடமுற்றுக் குறித்து நின்று
வீறுகொண்டு நெஞ்சே! நீ அனுப வத்தால்
மெய்ஞ்ஞான வீடதனில் விளங்கு வாயே.

மனம் கேட்டல்

"ஆனால், சாத்திரம் தெரியாத பேர்கள் சற்குருவினிடம் உபதேசம் பெற்றுச் சாதித்து அனுபவமடைந்த பேர்கள் பெற்ற காட்சி, நூலிலுள்ள பொருளுக்கு ஒத்துக்கொள்ளுமோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

உறுதிகொண்ட பிள்ளையென்றால் ஆசான் வைத்த
உபதேசங் கேட்டளவி லுறுதி கொண்டே
இருதயத்தில் நாட்டினது நழுவி டாமல்
எப்போதும் குருபத்தி தவறி டாமல்
மறுகவலை சாராம லூன்றப் பெற்றால்
வழங்குநூல் பேசுகின்ற வன்மைக் கொக்கும்
கிருபைதரும் முத்தியே அடைய லாகும்
கிட்டினவர்க் கேதுகுறை? கேடில் நெஞ்சே!

மனம் கேட்டல்

"ஆனால், ஞானானுபவம் ஒருவர் பெற்றிருந்தால், பெறாதவர்கள் அந்த அனுபவத்தைச் சொல்லென்றும் காட்டென்றும் சொன்னால், அவர்களுக்கு ஒத்துக்கொள்ளும்படி சொல்லலாமோ? அப்படி இப்படி யென்றுங் காட்டலாமோ? ஆகிலும், மெய்ப்பொருளின் பிரகாசத்தைப் பேசினால், மனமொத்துக் களிப்பார்களோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

ஒருவர்தின வொருவர் சொரிந் துற்றபோதே
உற்றவர்க்கோ சொரிந்தவர்க்கோ வுற்றுப் பாராய்;
மருவுமந்தச் சொப்பனத்திற் கண்ட காட்சி
மகிழ்ந்தவர்க்கோ கேட்டவர்க்கோ மதித்துப் பாராய்;
உருகியுடன் அறுசுவை கொண் டுண்ட வர்க்கோ
உவகையுடன் கண்டவர்க்கோ வூன்றிப் பாராய்;
தெரிசனமுங் கண்டு சிந்தை யற்ற பேர்க்குச்
சிவஞானம் அவரவர்க்கே தெளியுந் தானே!

மனம் கேட்டல்

"ஆனால், மெய்ப்பொருளினுடைய பிரகாசம் அவரவர்கள் கண்டு களிக்கப்பட்டதுதானோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

நீ தானே அறிந்தல்லோ நிலைக்க வேண்டும்?
நிட்டூரஞ் சொல்லுகின்ற நெறியிற் சென்றால்
போதாது போதாது; பொந்துக் குள்ளே
புலியிருக்கு மென்னவதிற் புகுந்து பார்த்தால்
வேதாள மென்றதொரு மயக்கந் தீரும்
மெய்யடியார் மனங்களிக்க மேவி வாழ்வான்
வாதாடி முத்தர்களை விட்டி டாதே
மனமே! நீ யுள்ளபடி வணங்கு வாயே.

மனம் கேட்டல்

"ஆனால், தனித்தனியே சுகமடைவதாயிருக்க, பெரியவர்கள் ஒருவரோடொருவர் கூடிக் கொண்டு ஆனந்தம் மிகுந்து உறவாடுகின்றார்களே! அஃதெவ்விதக் காரணம் பற்றி?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

மறப்பான மூன்றுடலும் இழந்த முத்தர்
மனவெளியாம் பெருவெளியில் மருவ லாலே
துறப்பான ஆகாச மொன்றாந் தன்னில்
சூரியன்றன் பிரகாசத் தோற்றம் போலச்
சிறப்பாகத் தேகத்தி லிருந்த முத்தர்
திருட்டியினாற் கலந்தொன்றாய்த் தியானிப் பார்கள்:
மறைப்பான தில்லைநெஞ்சே கண்ம ணிக்குள்!
வன்னியொளி மருவுமந்த வண்மை பாரே.

மனம் கேட்டல்

"ஆனால், சாத்திரம் சரியை, கிரியை, யோகம், ஞானமென்று சாற்றுகின்றதே! அவற்றுள் முன் சொல்லிய முத்தொழிலுஞ் செய்து முடிந்த பின்னரன்றோ ஞானம் அறியவேண்டும்? அப்போதன்றோ

ஞானாசிரியர் கிருபாகடாட்சம் வேண்டுவது?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

சரியையுதல் முத்தொழிலுஞ் செய்கின் றோர்கள்
சாயுச்சிய முத்திரையைப் பணியவேண்டும்;
உருசியுடன் அமுதளித்துப் பாத பூசை
உண்மையுட னுபசாரஞ் செய்ய வேண்டும்;
பரிசைகொண்டு சோதித்து நிந்தை சொல்லிப்
பகைத்துவிடின் நசித்திடுவர் பலனோ பாழாம்;
விரிவுகொண்டு மயங்காதே ஊற்றுப் பாராய்;
வீணருடன் கேள்விவிட்டு மெய்ம்மை பாரே.

மனம் கேட்டல்

"ஆனால், அவ்வளவு மகத்துவம் இருக்கறபடியினாலே அம்முத் தொழிலானது இலாபமுஞ் சுளுவிலே முடித்துக் கொள்ளலாகாதோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

சாயுச்சிய முத்திரையை அடுத்துக் காத்துச்
சங்கையற்றுத் திருவுளத்துப் பாங்குக் கொத்தால்
நீயுச்சிய மாகவென்று கிருபை நோக்கில்
நேரான முத்தொழிலி னிலாபம் நேர்ந்து
மாயுச்சிய மாகவே அம்ப லத்தான்
மலரடிக்கே அன்பாகச் செல்வாய் நெஞ்சே!
பாயுச்சிய மாகவே பெற்றோ ருண்டு
பராபரத்தை அடைந்ததன் பண்பி.ஃ தாமே.

மனம் கேட்டல்

"ஆனால், இத்தகைய அனுபவத்தை இல்லறத்தினின்றும் பெற்றுள்ளார் எவரேனுமுண்டு கொல்லோ? அன்றேல், துறவறம் பூண்டு, சந்நியாசியாய்ப் பற்பல விரத வைராக்கியமும் சர்வ சங்க நிவர்த்தியுஞ் செய்து, ஜெகத் சஞ்சாரத்தை விட்டகன்று, ஆரணிய சஞ்சார முற்று வருபவர்களின் ஞான மென்னும்அறிவு பிரகாசமாகிய ஸ்பஷ்டப்பட்டுளரோ? இவர்களிலுந் தன் மனத்துட் குடிகொண்ட அஞ்ஞானந்த காரத்தையோட்டும் வன்மையிலராகி, மூடராதலுமுண்டோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

சன்னியாசி யானவருள் மூட ருண்டு
சமுசாரஞ் செய்பவருள் ஞானி யுண்டு
முன்னாலே ஏதுவாம் பிராரத் வங்கள்
மூட்டிவிட்டு ஞானிக்கு முறைதப் பாது

பின்னாலே இருவினையுந் தொடரச் செய்து
பெற்றிடுவார் ஆசான்றன் கிருபை கொண்டு
பின்னாபின் னங்களா லென்றெண் ணாதே
பெருஞ்சோதி முத்திரையைப் பேணிக் கூடே.

மனம் கேட்டல்

"ஆனால், இல்லறத்திலேயிருந்தும் ஞானம் பெற்றுக்கொள்ளலாமென்கிறது சுளுவாய் இருக்கிறதே? உலகத்திலுள்ள பலரும் ஞானாசிரியரிடத்து அனுக்கிரகம் பெற்றுக்கொண்டு முத்தியை அடைவது அருமையாயிருக்கிறதே, அதிலென்ன பிரயாசை?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

யாவர்களும் பெரியோரை அடுத்துக் காத்தே
அவரடிக்கே பணிந்துமிக அன்பு செய்தே
ஆவலுடன் பன்னிரண்டு வருடங் காத்தும்
அப்போது பக்குவத்தை அறச்சோ தித்துத்
தேவர்முதல் மூவர்களுந் தேடிக் காணாத்
திருவடியும் முடிநடுவுந் தெரிசிக் கத்தான்
நாவதனா லுபதேசஞ் செய்வார் நெஞ்சே!
நல்லறிவால் வெகுபூசை நவின்ற தாமே

மனம் கேட்டல்

"ஆனால், புண்ணியம் மிகுந்து, சிவாசார பத்தி, நேயம், ஆசார்ச்சனை வெகு காலஞ்செய்து, பின்னே நல்லறிவு பிரகாசித்திருக்கும் பேர்களுக்குப்பெரியவர்கள் தரிசனம் கிட்டும். அப்பேர்ப்பட்டவர்கள் ஆசான் திருவுளத்துப் பாங்குக்கொத்து நடந்து பரகதியடைவார்கள் என்று சொன்னதும் அறியலானேன். அதிலும், பெரியவர்களை அடுத்து, அவர்கள் திருவுளத்துப் பாங்குபோல நடந்து, தீக்ஷையும் பெற்றுக்கொண்டு, சாத்திரத்திலுள்ள பூட்டை அனுபவத்துக்கும் ஒப்பும்படி தெரியவுங் கேள்விப்பட்டுக்கொண்டு ஆசாரியரைக் கவனியாமல், மதங்கொண்டு ஆசாரியர் திருவடி சூட்ட மகிழ்ச்சியில்லாமலும், பூரண தீக்ஷையாகாமலும், தட்டிப் போகிறதுண்டோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

அடியருக்குத் தொண்டாவ தருமை நெஞ்சே!
அவரவர்க்கு விட்டகுறை அடுத்த காலம்
பிடியாம லிருப்பாரோ? தொட்டுக் கொள்வார்;
பேதைமைக ளாலுலகப் பிணக்கு வந்து
குடியாகும் அதனாலே நழுவிப் போவார்
குற்றமறச் சற்குருவைக் குறிக்கச் சொல்லும்
விடியாத காலத்தி லிருளே யாகும்
விடிந்தபின்பு கண்ணுக்கு வெளிச்ச மாமே.

மனம் கேட்டல்

"நீ உலக விபரீதம் வருகிறதாகவும், அதனாலே ஆசானைவிட்டு நழுவும் போது ஆசானைக் குற்றமாகக் குறித்துக்கொண்டு போகிறதாகவும் சொன்னாய். அறியலானேன். ஆகிலும், இவ்வளவிலே நழுவினாலும், இன்னொரு தேகம் புண்ணியம் மிகுந்த மானிடமாயெடுத்து, சடுதியிலே விட்ட குறை முடியும்படி ஞானசாத்திரியார் கிருபையடைந்து, முத்தியடைவார்களோ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

இவ்வளவுந் தொட்டேகும் போது மீண்டும்
இகபோக விபரீ தம் வந்தா லுந்தான்
அவ்வளவுந் தான்குருவின் திருவு ளத்துக்
கன்புதவ றாமலே அகன்றா னாகில்
தெவ்வளவாய் விட்டகுறை தாக்குஞ் சேர்க்குந்
தேசிகனைப் குற்றமென்னில் தெளிந்து மேலாம்
நவ்வளவா யிழிந்துவிடும்; பின்னு மந்த
ஞானகுருத் துரோகமுற்று நரகெய்து வாரே.

மனம் கேட்டல்

"ஆனால், ஞானாசாரியரிடத்தில் ஒத்தாற்போலிருந்து தெரிந்து கொண்டு, ஞானக்குருத்துரோகி தானே தான் தெளிந்தவன் போலப் பேசுகிறாய்; உலகத்தார்களுஞ் சிலபேர்கள் அதைக்கேட்டு மயங்கி, ஒத்து வணங்குகிறார்களே! அவர்களுக்கும் இவர்களுக்கும் என்ன இலாபங் கிடைக்கும் ?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

புலித்தோலைப் பசுவுரித்துப் போர்த்துக் கொண்டு
புலியென்றாற் புலியாமோ? இன்னங் கேளாய்:
பலிப்பாகப் பெண்போலப் புருடன் வேடம்
பகட்டினால் அவனுருவம் பாவை யாமோ?
சலிப்பான நரகத்தில் வீழு மாண்பர்
சற்குருவின் றன்னிடத்திற் கற்றுக் கொண்டு
நலிப்பாகப் புலிப்பாயு மியல்பு போல
நானிலத்தோர் வணங்கினதா லீன மாச்சே.

மனம் கேட்டல்

"ஆனால், அவன்றானுங் குருத்துரோகியானபடியினாலே எவ்வளவு தெளிவாய்ப்பேசினாலும் முத்தி விலக்கனென்பது சரியே. அவன் நிச்சயவானென்று நேசிக்கிறவர்கட்கு என்ன இலாபம்?" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

மரப்பசுவின் முலையதனிற் பாலுண் டாமோ?
மலடிக்குச் சுதனுடைய மகிழ்ச்சி யுண்டோ?
துரத்தறியாத் தண்ணீர்ப்பாம் பதன்த லையில்
துலங்குமணி யிரத்தினமுந் தோன்று மோசொல்;
பரத்தினுடை நிலையதனைக் குருமுன் பாகப்
பதியாக மூடனையே பணிந்த தாலே
விருத்தமே யல்லாம லுதவி செய்ய
மெய்ஞ் ஞான முண்டாமோ? விளம்பு நெஞ்சே!

மனம் கேட்டல்

"ஆனால், அறியலானேன். பெண்டிர்க்கு ஞானம் வாராதென்றும், புருடர்க்கு மாத்திரம் ஞானமுண்டென்றும் கூறுதல் எதனாலே? அது விளங்குமாறு சொல்க!" என்று மனம் கேட்க, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

அஞ்சுகின்ற பெண்ணென்றும் ஆணென் றுந்தான்
அஞ்சுபஞ்ச பூதத்திற் பிரிந்த துண்டோ?
நெஞ்சிலுள்ள வஞ்சகங்கள் வேறு முண்டோ?
நிறம்வேறோ, குணம்வேறோ, நேசம் வேறோ?
மிஞ்சுகின்ற உயிர்தானாண் பெண்ணென் றுண்டோ?
மெய்கண்ட நூலதிலே விரித்த துண்டோ?
சஞ்சலத்தாற சொற்கேட்டு மயங்கி டாதே
சங்கையற முன்னூலைச் சார்ந்து பாரே.

மனம் கேட்டல்

"ஆனால், 'பேதைமையென்பது மாதர்க்கு அணிகலம்' என்று ஔவையார் கூறியதென்கொல்?" என்று மனம் வினவ, அறிவு கூறுகின்றது:

அறிவு கூறுதல்

ஆணுக்கும் பெண்ணுக்கும் அறிவொன் றேயாம்;
ஆனாலும் பேதைகுணம் பெண்ணுக் குண்டு;
வீணுக்கே எடுத்தசன்மம் அனந்தங் கோடி!
விதேகமுக்தி யடைந்தவர்கள அவரு ளுண்டு;
ஊணுக்குத் தேடியுண்டே உறங்கிச் செத்த
உலுத்தருண்டு புருடரிலே யனந்தங் கோடி;
தாணுக்கே ஏகசரா சரந்தாம் நெஞ்சே!
சற்குருவுக் கப்படியே சார்ந்து பாரே.

மனம் கேட்டல்

"ஆனால், அதுவுமறியலானேன். நான்கேட்ட சங்கைக்குச் சரியென்னும் படி சமாதானங் கூறி நன்றாக அருமையாய்த் தெளி